Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95
Date of Publication : 1st of Every month    Date of Posting : 5th & 6th of Every month
Regd. No. TN / CC (S) DN / 119 / 12-14    Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)/WPP-608/12-14
வேணு: 19 | பிப்ரவரி 2014 | கானம் : 7











ஆண்டுவிழா 25.12.2013 சென்னை

Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME · NO SELF INTEREST · ONLY GOD · NO NAME

தனி பிரதி Rs.10/-

# மதுரமுரளி

MADHURA MURALI

ஆண்டு சந்தா ரூ120/-

மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள் அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப்பத்திரிக்கை




வேணு : 19 | பிப்ரவரி 2014 | கானம் : 7
Delivered by India Post    www.indiapost.gov.in



ஜனவரி 11-19, 2014 - சென்னை நாரதகானசபாவில் "பக்த விஜயம்"











ஜனவரி 4, 2014 - சென்னை காமராஜர் அரங்கத்தில் மாணவர்களுக்கான மஹாமந்திரகூட்டு பிரார்த்தனை - டாக்டர் பாக்யநாதன்ஜி, ராமானுஜம்ஜி









ஜனவரி 9,18, 2014 -சென்னையில் மாணவர்களுக்கான மஹாமந்திரகூட்டு பிரார்த்தனை - திரு. டாக்டர் ஜனனி வாசுதேவன், திருவிக்னேஷ், திருசனத்



ஜனவரி 1, 2014
அனுமத் ஜெயந்தி- மதுரபுரி ஆஸ்ரமம்
- கன்யாகுமரி ஜய ஹனுமான்



ஜனவரி 1, 2014 - வைகுண்ட ஏகாதசி புறப்பாடு
மஹாரண்யம் ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் கோவில்



டிச21-27, 2013 - ஹூஸ்டன் நாமத்வார், யு.எஸ்.ஏ வில் ஆண்டு விழா
ராமானுஜம்ஜி - ஸ்ரீமத் பாகவத சப்தாஹம்




ஜனவரி 10, 2014 - அம்பாசமுத்திரம் - மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - முரளீஜி



டிசம்பர் 13 - 15, 2013 -
மேதான், இந்தோனேசியா -மஹாமந்திர சத்சங்கம் - பூர்ணிமாஜி


ஜனவரி 1, 2014
-ஸ்ரீரேணுகா வித்யாலயம், லக்ஷ்மிபுரம்
மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை

ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 19 பிப்ரவரி 2014 கானம்: 7

**ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே**
**ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே**

**இந்த இதழில் ...**


| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர் - 215 | 03 | சனாதன புதிர் | 25 |
| ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 08 | பாலகர்களுக்கு ஒரு கதை | 26 |
| பாகவத பழம்- ஸ்க2 - ப9 | 10 | சத்சங்க செய்திகள் | 28 |
| செய் செய்யாதே! | 13 | பிருந்தாவனமும் நந்தகுமாரனும் | 30 |
| பிரார்த்தனை | 15 | மாலே மணிவண்ணா | 32 |
| ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் | 22 | அப்பாலுக்கு அப்பால் | 34 |


**உண்மையான சீடன் செய்ய வேண்டிய சாதனை என ஏதுமில்லை. முழுவதுமாக, தன்னை, குருவினிடத்தில் ஒப்படைத்து, சரணாகதி பண்ணினாலேயே போதும். தன் இதயத்துக்குள் எழும் சரணாகதி மூலமாக, சீடன் தனக்கும் குருவுக்கும் இடையே ஒரு அந்தரங்க தொடர்பை உருவாக்கி கொள்கிறான். குருவே அவனது ஆன்மீக தந்தையாக ஆகின்றார்.**

**- ஞானானந்தகிரி ஸ்வாமிகள்**

# ஸ்ரீஸ்வாமிஜியின் கீர்த்தனம்

*ராகம்: "விட்டலா யேரே" மெட்டு                தாளம்: ஆதி*

*பல்லவி*

*கோவிந்தா வாராய் ப்ரேமிக வரத!*

*சரணங்கள்*

*1.த்ரௌபதி மானம் காத்து துரியோதனனை அழித்து*
*தர்மத்தை நிலைநாட்டினாய்        - கோவிந்தா*

*2.துன்பப்பட்டு தவம் செய்த த்ருவராஜனுக்கு*
*த்ருவபதம் தந்து துயரம் தீர்த்தாய்- கோவிந்தா*

*3.அம்பரீஷனை காத்து துர்வாஸரை அடக்கி*
*பாகவதர்களின் பெருமையை உணர்த்திய-*
*கோவிந்தா*

*4.நன்மையே செய்யாமல் நாராயணா என்ற*
*மாத்திரத்தில் நல் உலகம் தந்தாய் - கோவிந்தா*

*5.அரக்கனைக் கொன்று பாலகனை காத்து*
*நாம வைபவம் உணர்த்தினாய்      - கோவிந்தா*

முன் அட்டை: ஜனவரி 1, 2014, ஆங்கில புத்தாண்டு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை, இடம்: ஸ்ரீரேணுகா வித்யாலயம், பெரியகுளம்.

பின் அட்டை: டிசம்பர் 25 ,2013 கோபகுடீரம் ஆண்டு விழா - மஹோதயாஹால், அசோக்நகர், சென்னை.



# மதுரமான மஹநீயர் - 215

டாக்டர்.ஆ.பாக்யநாதன்

புண்டலீகனுக்காக பண்டரிபுரத்தில் அமர்ந்த வீடு தேடி வரும் விட்டலனும், ருக்மிணிக்காக தானே சிலா ரூபமாய் ஆன உடுப்பி மத்து கிருஷ்ணனும், ப்ரஹஸ்பதியாலும் வாயுவாலும் ஸ்தாபிக்க பெற்ற குருவாயூர் குழந்தை கிருஷ்ணனும் எப்பொழுதும் பக்தர்களுடன் லீலைகள் புரிந்து வருகின்றனர். சரித்திர காலம், சென்ற காலம் என்று மட்டுமில்லாமல், இன்றும் கணக்கற்ற லீலைகளை இந்த அர்ச்சா அவதாரங்களிலிருந்து கிருஷ்ணன் செய்து வருவதாக ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் கூறுவார்கள். ப்ருந்தாவனமாகிய பக்தர்களின் மனதில் ஒளிந்திருக்கும், அப்படிப்பட்ட அநேக லீலைகளை இதற்கு உதாரணமாய் சொல்லலாம்.

தஞ்சாவூரில் ஒரு பக்தர் வாழ்ந்து வந்தார். அவர் பேருந்து நிலையம் அருகே, ஒரு ஜவுளி கடை நடத்தி வந்தார். அவருக்கு கிருஷ்ணன் என்றால் கொள்ளை பிரியம். அதிலும் குருவாயூரப்பன் என்றால் மிகவும் பிடிக்கும். ஒவ்வொரு ஏகாதசியின்பொழுதும் தனது கடையை மூடி விட்டு, குருவாயூர் சென்று விடுவார். எப்பொழுதும் அவர் நாவானது கிருஷ்ண கர்நாம்ருதம், நாராயணீயம் போன்ற கிரந்தங்களின் பாடல்களை, ஸ்லோகங்களை முணுமுணுத்து கொண்டே இருக்கும். அவருக்கு ஒரு நண்பர் இருந்தார். அவரும் கடைக்கு அடிக்கடி வந்து சத்சங்கமாக பேசி கொண்டிருப்பார். ஒருசமயம் பக்தர் கல்லாவில் இருந்தபடியே, வரவு செலவு கணக்கு பார்த்து கொண்டிருந்தார். அது என்னவோ சரியாக வரவே இல்லை. அப்பொழுது பார்த்து இந்த நண்பர் வரவே, பக்தர் அவரை கல்லாவில் அமர்த்தி விட்டு, வரவு-செலவு கணக்கை தொடர்ந்து பார்க்கலானார். கணக்கு பார்க்கிறேன் என்று இருந்தாரே ஒழிய, வாய் என்னவோ குருவாயூரப்பன், கிருஷ்ணன் என்று சொல்லி பாட்டு பாடி கொண்டே இருந்தது. நண்பரோ மனதில் "இப்படி இருந்தால்

கணக்கு எப்படித்தான் சரி வரும்?" என நினைத்தார். அப்பொழுது பக்தர் திடீரென "கண்ணா! கிறுக்காதேடா! இது கணக்கு புத்தகமடா! இதில் கிறுக்காதே!" என்று உரக்க கூவி, கணக்கு புத்தகத்தை யாரிடமிருந்தோ பறிப்பது போல் செய்தார். பக்தர் கண்களிலிருந்து நீர் பெருகியது. அந்த புத்தகத்தை நண்பரிடம் காட்ட, அதில் ஐந்து போல் தோன்றிய எண்ணை எட்டாக கண்ணன் திருத்தி இருந்தது தெரிந்தது. நண்பர் திகைத்து போனார். பக்தரோ ஆனந்த கண்ணீருடன், "கண்ணா! என் கணக்கு உன் கணக்கானதோ! இதற்குத்தான் விளையாடினாயோ! உன் கருணையே கருணை" என உருகி நின்றார்.

இப்படித்தான் அர்ச்சாவதாரத்திலிருக்கும் பகவான், மறைந்து இருந்து, லீலைகள் புரிந்து பக்தர்களின் பக்தியை அதிகரிக்க செய்து, மனதில் நீங்கா இடம் பெறுகிறான். நமது ப்ரேமிகவரதனின் சன்னதியும் அதற்கு ஒரு விதிவிலக்கல்ல. அவனும் குருவாயூர், பண்டரிபுர, உடுப்பி கிருஷ்ணன் போல தினமும் லீலைகளை புரிந்தவாறு இருக்கிறான். அவன் பக்தர்களுக்கு கஷ்டம் என்றால் ஓடோடி வருவான். அவனுக்கு அவன் பக்தர்களுடன் விளையாடுவதில், பிரியம் அதிகம். கோபர்களிடமும் கிருஷ்ணன் அதைத்தானே செய்தான்!

திருமதி.ஜெயந்திரமணன், திரு.ரமணன் தம்பதிகள், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களிடம் மிகுந்த பக்தி பூண்டவர்கள். இரு மகன்கள் மஹேஷ், தினேஷ் மற்றும் மருமகள் அபர்ணா மஹேஷ் ஆகியோருடன் சிட்னி, ஆஸ்திரேலியாவில் வசித்து வருகின்றனர்.

சில வருடங்களுக்கு முன், நாமத்வார் அன்பர்கள் எல்லோரையும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், சந்தித்து பேச அவா கொண்டார்கள். அப்பொழுது ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் ப்ரேமிகவரதனிடம், "கிருஷ்ணா! எனது விருப்பத்தை ஏற்று உனது நாமத்தை பலரும் சொல்லி பயனடைய வேண்டும் என்ற உயர்ந்த உள்ளத்துடன், பல அன்பர்கள், பட்டி தொட்டிகளிலும் கிராமம் கிராமமாகவும் கடல் கடந்தும், பாடுபட்டு, உன் நாமம் சொல்லி அயராது உழைத்து வருகின்றனர். நீ எப்படி என்னை காக்கிறாயோ, அதுபோலவே இந்த அன்பர்களையும் காத்து அருள வேண்டும்" என்று கண்ணனை துதித்தார்கள். அது நிச்சயமாக மேற்கண்ட ஜெயந்திரமணன் அவர்களுக்கு பொருந்தும்.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் ஆணையை ஏற்று, அன்பர்கள் சத்சங்களுக்காக ஆஸ்திரேலியா செல்கையிலும், நமது பிற சத்சங்கங்களிலும் மிகுந்த ஆர்வமாய் ஈடுபட்டு ஒருங்கிணைத்து ஒவ்வொரு விஷயத்தையும் திருமதி.ஜெயந்திரமணன் செய்வார்கள். கடந்த வருடம் 2013, ஜனவரி 10ஆம் தேதி வெள்ளிக்கிழமை ஜெயந்திரமணன் அவர்கள் வீட்டில், நமது ப்ரேமிகவரதன் செய்த ஒரு லீலை குறித்துத்தான் இப்பொழுது பார்க்க போகிறோம்.

வெளிநாட்டு பன்னாட்டு நிறுவனங்களில், அலுவலகம் சென்று வேலை பார்ப்பதோடில்லாமல், சில நாட்கள் வீட்டில் இருந்தே (working from home -option) பணிபுரியலாம். அப்படிப்பட்ட நாட்களில், இணையதளம் மூலமாக, சரியான சமயத்திற்கு அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு, அத்தொடர்புடனேயே நாள் முழுவதும் பணிபுரிய வேண்டும். எந்த ஒரு ஈமெயிலோ, செல்போன் அழைப்போ வந்தால், உடனுக்குடன் பதிலளிக்க வேண்டும். அது ஒரு முக்கிய பணி. அப்படி செய்யாவிடின், கேள்விகளையும் பின்விளைவுகளையும் சந்திக்க வேண்டி வரும். ஜெயந்திரமணன் அப்படி ஒரு பிரபல பெரிய பன்னாட்டு நிறுவனத்தில், முக்கிய பணியில் இருந்தார். அன்றைய தினம் வீட்டிலிருந்து அலுவலக பணி செய்து கொண்டிருந்தார். பணியில் கண்டிப்பான ஒரு புது மேலாளர் வந்திருந்தார் என்பதால், உடனுக்குடன் அழைப்புகளுக்கு பதில் தந்தவாறு இருந்தார். வீட்டில் கணவரும் மருமகளும் மகனும் இல்லை.

ஜெயந்திரமணன் வீட்டிற்கு, முன் வாயில் மற்றும் காரை நிறுத்துமிடமான கேரேஜ் வழி என இரு வழிகள் உண்டு. எந்த வழியிலிருந்தும், வீட்டிற்கு வெளியே சென்று வரலாம். காலை 10மணி அளவில், வெய்யில் அதிகமாக இருக்கவே, காரை உள்ளே வைப்பதற்காக, கேரேஜ் வழியாக வெளியே வந்தார். "முன் வாயில் சாவியை எப்பொழுதும் கூடவே வைத்து கொள்" என அவர் கணவர் அவரிடம் அடிக்கடி சொல்வது வழக்கம். அது ஞாபகம் வர, அந்த சாவியை பத்திரமாக எடுத்து வைத்து கொண்டார்.

காரை பார்க் செய்து விட்டு, கேரேஜ் வழியை சாத்தி விட்டார். முன் வாயில் வழிக்கு சென்றார். வீட்டினுள் செல்லலாம்

என்றவாறு தன் கையிலிருந்த சாவியை எடுத்து பூட்டை திறந்தார். கதவு திறக்கவில்லை. அப்பொழுதுதான் அவருக்கே புரிந்தது. அடடா! வீட்டினுள்ளிருந்தபோது, உட்பக்கமாக லாக் போட்டதை அவரே மறந்திருக்கிறார். கேரேஜ் வழியை சாத்தி விட்டதால், திரும்பவும் அவ்வழியாக உள்ளே நுழைய முடியாது.

அப்பொழுது வீட்டினுள்ளே செல்போன் அடிப்பது கேட்டது. அது புது மேலாளராக இருந்தால் என்ன செய்வது? அழைப்பை எடுக்காததால், வேலையில் கவனமின்றி, கடைக்கு சென்று விட்டதாக நினைத்து கொள்வாரோ, என்ற பயமும் பதட்டமும், உடம்பில் தொற்றிக் கொண்டது. கையில் செல்போன் இல்லை. மேனேஜருக்கு போன் செய்து, சேதியும் சொல்ல முடியாது. என்ன செய்வது? அவருக்கு உடனே, பக்தர்கள் கூப்பிட்டால், ப்ரேமிகவரதன் உதவ ஓடோடி வருவான் என்று ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் சொல்வது ஞாபகத்திற்கு வந்தது. "ப்ரேமிகவரதா எனக்கு உதவி செய். ஒரு வழி காண்பி" என்று வேண்டி நம் ஸ்வாமிஜியின் கீர்த்தனமான "இன்று போல் என்றும் எனை நீ காத்திட வேண்டும் ப்ரேமிகவரதா!... .. தூணை பிளந்து வந்து பாலகனை காத்தாய் ... பேதை எனை காப்பது நின் கடனே" என்ற கீர்த்தனத்தை மனதில் உருகி பாடி வேண்டினார்.

திரும்ப திரும்ப மனதில், அதே கீர்த்தனையை பாடி பாடி வேண்டினார். அதிசயமாக அப்பொழுது, பக்கத்து வீட்டுக்காரர் ஏதோ வேலையாக திரும்பி வந்தார். அவரிடம் தன் நிலையை சொல்லி மருமகள் அபர்ணாவுக்கு போன் செய்து, உள்ளே செல்வதற்கான வேறு ஒரு சாவி எடுத்து வர சொன்னார். மேனேஜர் புதியவர் என்பதால், அவர் நம்பர் ஞாபகம் இல்லை. அதனால் அந்த பதட்டம் நீடித்தவாறே இருந்திருக்கிறது.

"கணவர் இங்கு இருந்தால் ஏதாவது உபாயத்தினால் முன் வாயிலை உடைத்து இருப்பார். அவரிங்கு இல்லாததால் அதற்கு வாய்ப்பில்லை. உடைத்து செல்லலாம் என்றாலோ சுற்றி எங்கும் தோட்ட வேலைக்கருவிகளும் கிடைக்கவில்லை. மருமகள் சாவி எடுத்து வர காலதாமதம் ஆகும். இங்கோ தாமதம் ஆகி கொண்டே இருக்கிறது. "ப்ரேமிகவரதா உதவி செய்" என்று மனம் பதறி பதறி அழுதது. பொறுமை தவற ஆரம்பித்து இருக்கிறது. இயற்கையில் பொறுமை எல்லை மீறினால் அது கோபமாக

மாறும். பக்தனானவனுக்கு அது அன்பு கலந்த கோபமாக மாறும். திரும்பவும் ப்ரேமிக வரதனிடம், "மேலாளருக்கு நான் என்ன பதில் சொல்வது? கஜேந்திரன், திரௌபதி, துருவன் ஆகியோர் தகுதி எனக்கில்லை. வேறு ஒரு கதியும் எனக்கில்லை. உன் கருணையை நான் நாடுகின்றேன். எனக்கு ஒரு வழி காண்பிக்க கூடாதா" என வேண்டினார். அந்த பிரார்த்தனை திடமாக தோன்றிய மறுகணம் ஒரு ஆச்சரியம்! கதவின் உட்புற லாக்கில், உள்ளே இருந்த ஒரு பெரிய ஸ்குரூ கழன்று, கதவு தானாக திறந்து கொண்டது. அதைப்பார்த்து, ஒரு உபாயமும் செய்யாத ஜெயந்தி ரமணன் அப்படியே ஸ்தம்பித்து விட்டார்.

காரணம்,ப்ரேமிகவரதன் தன் பிரார்த்தனையை கேட்டான் என்பதில் மகிழ்ச்சி. கதவு திறந்தது என்று மகிழ்ச்சி. ஆனாலும், அவன் எப்பொழுதும் எல்லா இடத்திலும் வியாபித்து இருக்கிறான் என்பதை காட்டி கொடுத்தானே, அதில் இருக்கும் மகிழ்ச்சி இன்னும் அதிகமல்லவா?

இதை என்னிடம் மதுரபுரி ஆஸ்ரமத்திற்கு வந்திருந்தபொழுது, ப்ரேமிகவரதனின் சன்னதியில், நேரில் சொல்லி சொல்லி, ஆனந்தப்பட்டார்கள்.


rb rajmani builders

launches its new project

"rajmani's mathura"

at kolapakkam (near Porur)

well designed and ventilated 2/3 bhk homes
(825 sq. ft to 1075 sq. ft) at fair prices

ph: 98400 30711 email: rajmanibuilders@gmail.com

ADVT

website: www.rajmanibuilders.com



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி: நான் நிறைய ஜபம், தியானம், பக்தி செய்பவர்களை கவனித்துள்ளேன். ஆரம்பத்தில் உண்மையில் sincere ஆக செய்து வந்தவர்கள் கூட, காலக்ரமத்தில் புகழ், பணம், காமம் என்று ஏதோ ஒன்றில், தடுமாறி விடுகின்றார்களே? ஏன்?

பதில்: இமயமலை ஏறுவதற்கு, எவ்வளவோ நபர்கள் முயற்சி செய்யலாம். அதில் ஓர் இருவரே வெற்றி பெற கூடும். அதுபோல ஆன்மீகத்தின் உயர்ந்த நிலையை அடைவது என்பது, அவ்வளவு ஒரு **easy** ஆன விஷயமில்லை. அதில் சறுக்கி விழுவது என்பதுதான் யதார்த்தம். உறுதியாக கடைசி வரை நின்று, அந்த நிலையை மின்னல் போல் உணர்வது என்பதுதான் அபூர்வம். அதனால் இதில் வியப்பதற்கு ஒன்றும் இல்லை.

கேள்வி: மனதின் நிலை என்ன?

பதில்: மனது எப்பொழுதுமே வெளிமுகமாகவே இருக்கும். உள்முகமாக திரும்பவே திரும்பாது. வெளிமுகமாக திரும்பினாலும் கூட, அது அறிவு சார்ந்த விஷயத்திலோ, அல்லது உயர்ந்த ரசனை உள்ள விஷயத்திலேயே கூட திரும்பாது. உணவு, பணம், காமம், போட்டி, பொறாமை, பொழுதுபோக்கு சாதனங்கள், தூக்கம், ஊர்சுற்றுவது, நண்பர்களுடன் சேர்ந்து பொழுது போக்குதல் அல்லது பாசம், குலம், மதம், மொழி, இனம் போன்றவற்றில்தான் தத்தளிக்கும். இதை தவிர, அந்த மனது உள்முகமாக ஆகாவிட்டால் கூட பரவாயில்லை. நல்ல விஷயங்களை, நிரந்தரமாக பற்றி கொண்டிருந்தால் கூட போதும். அதுவே மிகவும் கடினம்.

கேள்வி: முழுவதும் இறைவனை உணர்ந்தவர்களைத்தான் குருவாக அடைய வேண்டும் என்று ஏன் சாஸ்திரங்கள்

கூறுகின்றன?

பதில்: ஒருவர் இன்று வைராக்கியத்துடன், விவேகத்துடன் பகவத்தியானத்தில் இருக்கலாம். ஆனால் அவரிடம் அது ஒருநாள் இருக்கலாம்; ஒருமாதம் இருக்கலாம்; ஒரு வருடம் இருக்கலாம்; அதற்கு மேலும், அதில், அவர் எப்பொழுதும் நிரந்தரமாக இருப்பார் என்று, சொல்ல முடியாது. பகவானுடைய மாயை பொல்லாதது. ஆகவே, அவர்களை சரணடைந்து பலன் இல்லை. இதைத்தான், ஸ்ரீமத் பாகவதத்தில் உள்ள ஜடபரதர் சரித்திரம் உணர்த்துகின்றது. அதனால்தான், முழுவதும் இறைவனை உணர்ந்தவர்களையோ அல்லது கடவுளால் நியமிக்கப்பட்டவர்களையோதான், குருவாக அடைய வேண்டும் என்று சாஸ்திரங்கள் சொல்கின்றன.

பகவானுடைய ரூபத்தை, ஆராதித்து கொண்டாடி தியானம் செய்வது சகுண பக்தி; ஹ்ருதயத்தில் உள்ள ப்ரும்ம ஸ்வரூபத்தை விவேகத்தாலும், விசாரத்தாலும் உணர முயல்வது நிர்குண பக்தி; ஆனால், வேறு எந்த ஒரு சாதனையும் செய்யாமல், ராம நாமத்தை மட்டும் சொல்லி வருவது, இரண்டிற்கும் இடைப்பட்ட சுலபமான சாதனம்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

## அறிவிப்பு

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் தரிசன விவரம், நிகழ்ச்சிகள் ஆகிய பற்றி தெரிந்து கொள்ளவும், மேலும் தங்களது பிரார்த்தனைகளையும், விண்ணப்பங்களையும் பதிவு செய்யவும் +91-9382393833 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

இதை தவிர அலுவலகத்தை நேரடியாக தொடர்பு கொள்ள 91-44-24895875 என்ற தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.



# பாகவத பழம்

## ஸ்கந்தம் 2, அத்யாயம் 2

–ஸ்ரீ ஸ்வாமிஜி (9)



ஸ்ரீ சுகர் மேலும் தொடர்கிறார், "மனம் எதுவரை சலியாமல் நிலைத்திருக்கின்றதோ, அதுவரை இதுபோல் தியானம் செய்யவேண்டும். கதாதாரியான பகவானை, திருவடி முதல் அவனது புன்னகை வரை, ஒவ்வொன்றாக மனதில் தியானிக்க வேண்டும். அந்த அந்த அவயங்களில், மனதில் எந்த முயற்சியும் இல்லாமல் தானாக தெரிய ஆரம்பித்தவுடன், அதை விட்டு விட்டு மனதை மற்ற அவயங்களில், நிறுத்த முயல வேண்டும். இதனால், மனம் மேலும் மேலும் தூய்மையடையும்.

பகவானுடைய இந்த ஸ்தூலரூபத்தை, மனதில், பக்தி வரும் வரை, தியானிக்க வேண்டும். இந்த தியானமானது, அப்யாஸம். இதையே செய்துகொண்டு இருந்தால், ரஸ ரூபமான பக்தியுண்டாகும். ஆனந்த பாஷ்பம், கம்பம், மேனிசிலிர்ப்பு, மூர்ச்சை போன்ற பக்தி லக்ஷணங்கள், தோன்றும்வரை, அப்யாஸ யோகம் செய்ய வேண்டும். பக்தன் அழுவான், தொழுவான், ஆடுவான், பாடுவான் என்று ஒரு பக்தனை பற்றி கூறியுள்ளது. ப்ரம்மாதி தேவர்களும் எவருக்கு கீழானவர்களோ, அந்த ஈச்வரனாகவும், ஸர்வஸாக்ஷியாகவும், இருக்கும் அந்த பரமாத்மாவிடத்தில் பக்தி ரஸம் உண்டாகும்வரை, இந்த அப்யாஸ ரூபமான தியானத்தை, கர்மானுஷ்டானங்களுடன் கூடி, உள்-புறம் இரண்டு விதத்திலும் சுத்தமாக இருந்துகொண்டு, செய்யவேண்டும்.

அப்பேற்பட்ட பக்தி ஒருவனுக்கு ஸித்தித்துவிடுமானால், பின், பகவான் அவனுக்கு, எப்பொழுதும் காட்சியளித்துக்கொண்டே இருப்பான். அங்கு அப்யாஸத்திற்கு அவசியமே இல்லை.

இந்த தியானத்தை கூறிவிட்டு ஸ்ரீசுகர், ஒரு

யோகியானவன் எப்படி தேஹத்தை விட வேண்டும் என்று படிப்படியாக விளக்குகிறார். ராஜன்! இந்த தேஹத்தை விட விரும்பும் ஒரு யதியானவன், எப்படி உடம்பை விட வேண்டும் தெரியுமா?"

"சரீரத்தை விட விருப்பம் வந்தவுடன், அது என்ன புண்ய க்ஷேத்திரம், புண்ய காலம் என்றெல்லாம் மனதை செலுத்தாமல், ஸ்திரமான வசதியான ஒரு ஆஸனத்தில் சிரமமில்லாமல் அமர்ந்து, இந்திரியங்களை வென்றவனாய், மனதினால் மூச்சை அடக்கவேண்டும். அந்த தீரன், நிர்மலமான அவன் மனதை திடமான நிச்சய புத்தியால் அடக்கி, அந்த புத்தியை க்ஷேத்ரக்ஞனிடத்தில் செலுத்தவேண்டும். அந்த க்ஷேத்ரக்ஞனையும் அந்தர்யாமியான ஆத்மாவிடத்தில், லயிக்க செய்ய வேண்டும். இந்த சுத்த ஆத்மா, பரமாத்மாவேதான் என்று ஒன்றாக நிலைபெற்று சாந்தியடைந்தவனாய் வியவஹாரங்களிலிருந்து ஓய்வடையவேண்டும்.

அந்த பரமாத்மா எப்படிபட்டவன் தெரியுமா? இமையே கொட்டாத தேவர்களுக்கும், காலம், பிரபுவாக இருக்கிறது. அந்த காலம் என்பதே, பகவானிடத்தில் ஒன்றும் செய்ய சக்தியற்று இருக்கிறது. அப்படியிருக்க, அந்த காலத்திற்கு அதீனமாக இருக்கும் தேவர்கள், எவ்விதம் பகவானிடத்தில் சக்தர்களாவார்கள்? அவனது அதீனத்தில்தான், எல்லா தேவர்களும் இந்த பிரபஞ்சத்தின் ஒவ்வொரு விஷயமும், உள்ளது. அவனுக்கு மேலானவன், ஒருவனும் இல்லவே இல்லை.

மேலும், அந்த ஆத்மஸ்வரூபம் ஸத்வம், ரஜஸ், தமஸ் போன்ற குணங்களுக்கு அப்பாற்பட்டதாய் உள்ளது. அஹங்காரம், மஹத் தத்துவம், ப்ரதானம் என்ற மூலப்ரக்ருதி இவை எதுவுமே அந்த பரமாத்மஸ்வரூபத்தில் இல்லை. நான் இந்த சரீரமில்லை, ப்ராணனில்லை, அறிவுமில்லை, மனதுமில்லை என்று, "ந இதிநேதி'' (இது அல்ல இது அல்ல) என்று ஆத்மாவைத் தவிர, மற்றவைகளிலிருந்து விலகி, இந்த தேஹத்தில் 'நான்' என்ற புத்தியை முழுவதுமாக களைந்து, பூஜைக்கே உரியதான அந்த ஸ்ரீமந்நாராயணனுடைய சரணங்களை ஒரு க்ஷணம் கூட

வீணாக்காமல், இறுக்கமாக அணைத்துக் கொண்டு, வேறு ஒரு விஷயத்தில் பற்றேயில்லாமல் இருக்கவேண்டும்.

இப்படி செய்து பகவான் ஹ்ருதயத்தில் தெரியும்போது, அதையே அந்த பரமான வைஷ்ணவமான ஸ்தானம் என்று கூறுகிறார்கள். இந்த பிரம்மபாவத்திலேயே இருந்துகொண்டு, சாஸ்திரத்தினாலுண்டான ஞானவீர்யத்தால், எல்லா வாஸனைகளையும் அழித்துவிட வேண்டும்".

மேலும் சுகர் தொடர்கிறார், "வாயு வெளியில் தப்பிக்காதபடி பின்னங்கால்களால் அபானத்வாரத்தை நன்றாக அழுத்திக்கொண்டு எளிதாக பிராண வாயுவை நாபி, ஹ்ருதயம், மார்பு, தொண்டையின் மேல் பகுதி, புருவமத்தி, பிரம்மரந்திரம் என்று ஆறு ஸ்தானங்கள் வழியாக கிரமமாக மேலே மேலே கொண்டுபோக வேண்டும். அந்த முனியானவன் நாபியிலிருந்து வாயுவை ஹ்ருதயத்தில் ஏற்றி, பின் ப்ரம்மநாடி வழியாக, மார்பில் கொண்டுபோக வேண்டும். அங்கிருந்து அந்த வாயுவை தாலு மூலத்திற்கு (தொண்டையின் மேல் பகுதி) கொண்டு போக வேண்டும். அங்கிருந்து மிக நிதானமாக, புருவமத்திக்கு அதை உயர்த்த வேண்டும். பின் கண்கள், காதுகள், மூக்குகள், வாய் என்ற இந்த ஏழு சுவாச மார்க்கங்களையும் நன்கு அடைத்து, மனதை எல்லா ஆசைகளிலிருந்து விடுவித்து, முழு ஞானத்தை உடையவனாய், அரை முஹூர்த்தம் பிரம்மரந்திரத்தில் இருந்துவிட்டு, பின் தலையை பிளந்து, பிரம்மத்தை அந்த பிராணன் அடையவேண்டும்.

இப்படி பிரம்மத்தை அடைந்தவனாய், தேஹத்தையும் இந்திரியங்களையும் ஒருவன் விடவேண்டும்".

இதுவரை ஸ்ரீசுகர், இவ்வுலகை விட்டு விட்டு, பகவானை நேராக அடைய விருப்பமுள்ளவர்களுக்குக்கான மார்க்கத்தை கூறினார். இனி மேல் லோகங்களுக்கு செல்ல விரும்பி, பின் அங்கிருந்து, பகவானை அடைய விரும்பும் ஒரு ஜீவனின் அர்ச்சிராதி மார்க்கம் வழியாக செல்லும் கதியை முழுவதுமாக வர்ணிக்கிறார்.

(கனியும்)

# செய்! - செய்யாதே!

–நல்ல ஹரி

ஜய, விஜயர்கள் ஸ்ரீவைகுண்டத்தில் எப்பொழுதும் பகவானுடைய சன்னதியில், துவாரபாலர்களாக இருப்பவர்கள். ஒருசமயம் சனகர், சனந்தனர், சனத்குமாரர், சனாதனர் நால்வரும் பகவானை சேவிக்க வந்தனர். துவாரபாலர்களுடைய அனுமதியை கோராமல், அவர்கள் சென்றதால், துவாரபாலர்களுக்கு கோபம் வந்து விட்டது. வாசலிலேயே, சனகாதிகளை தடுத்து நிறுத்தி விட்டனர். பகவானை ஆர்வமுடன் சேவிக்க போகும் அவர்களை தடுத்து விட்டதால், சனகாதிகள் நால்வரும் ஜய விஜயர்களை சபித்து விட்டனர். "ஸ்ரீவைகுண்டத்தில் பகவானுடைய அருகில் இருந்தும், உங்களுக்கு பாகவதர்களான எங்களை தடுத்து நிறுத்த வேண்டும் என்ற எண்ணம் எப்படி வந்தது? ஆகவே நீங்கள் இருவரும் மூன்று முறை பூமியில் அசுரர்களாக பிறக்க கடவது" என்று சபித்து விட்டார்கள். ஜயவிஜயர்கள் பகவானிடம் முறையிட, பகவானும், "அவர்கள் பரம பாகவதர்கள். அவர்களுடைய சாபத்தை ஏற்று கொள்ளத்தான் வேண்டும். அதே சமயத்தில் கவலை வேண்டாம். உங்களை நானே வந்து வதம் செய்வேனே தவிர, வேறு யாருக்கும் உங்களை வதம் செய்வதற்கு விட மாட்டேன்" என்றான்.

பகவான், அவனுடைய குழந்தைகளான நமக்கு நல்லது சொல்வதற்காக, அவதார புருஷர்களை எப்படி அனுப்பி கொண்டே இருக்கின்றானோ, அது போல் அசுரர்களாக இவர்கள் லோகத்துக்கு போகத்தான் போகின்றார்கள்.

"இவர்கள் மூலமும் ஜீவன்களுக்கு ஒரு நன்மை செய்ய வேண்டும். எப்படி செய்யலாம்? மஹான்கள் மூலம் என்ன செய்ய வேண்டும் என்பதை உலகிற்கு எடுத்து சொன்னோம். இவர்கள் மூலமாக எதை செய்ய கூடாது என்பதை உபதேசிப்போம்" என்று பகவான் சங்கல்பித்து கொண்டான்.

பூமியில் வெடிகுண்டு வைப்பது, பலரை காரணமில்லாமல் கொல்வது, இயற்கையை அழிப்பது போன்று

பூமாதேவிக்கு ஹிம்சை தரக்கூடியவர்களை, பகவான் அழித்து விடுவான் என்பதை ஹிரண்யாக்ஷன் மூலமாக தெரிவித்தார். நாமகீர்த்தனம் செய்து கொண்டு, நாராயணனையே சரண் அடைந்த பகதர்களை துன்புறுத்தினாலோ, அல்லது நாமகீர்த்தனம் செய்பவர்களை செய்ய விடாமல் தடுத்தாலோ, அவர்களையும் பகவான் அழித்து விடுவான் என்பதை ஹிரண்யகசிபு மூலம் தெரிவித்தான்.

ஒருவனிடம் எத்தகைய பக்தி இருந்தும், தவம் இருந்தும், வேள்விகள் பல செய்தவனாக இருந்தாலும், பிறருடைய மனைவியை பலாத்காரமாக அடைய நினைத்தால், அவனை தெய்வம் அழிக்கும் என்பதை ராவணன் மூலமாக தெரிவித்தான். உழைக்காமல் எப்பொழுதும் சோம்பேறியாக தூங்கி கொண்டு ராவணன் போன்றவனுடைய தயவில் வாழ்வானானால், அவனாலும் நன்மை எது என்று தெரிந்தாலும், அதை அடைய முடியாது. தீமையிலிருந்தும் விலக முடியாது; அவனையும் இறைவன் அழிக்கும்படி நேரிடும் என்பதை கும்பகர்ணன் மூலம் தெரிவித்தான்.

தெய்வத்தை காரணமில்லாமல் நிந்தை செய்வது பாபம். அப்படி செய்தால் தெய்வம் அவனை அழித்து விடும் என்பதை சிசுபாலன் மூலமாகவும் தெரிவித்தான். அப்படி தெய்வநிந்தனை செய்பவனுடன் உடன் இருந்து, அதை தானும் செய்து கொண்டு, இருப்பதும் மிக பெரிய பாவம். அவர்களையும் தெய்வம் அழித்து விடும் என்று காண்பித்தார்.

மஹான்களை கொண்டு, எதை செய்ய வேண்டும் என்று எப்படி தெய்வம் நமக்கு உணர்த்துகின்றதோ, அதுபோல், இவர்களை கொண்டு நாம் என்ன செய்ய கூடாது என்பதை உணர்த்துகின்றது.


பாகவதர்களாகிய நாங்கள், எங்கள் கண்ணனிடம் எங்களிடம் ஊற்று எடுக்கும் ப்ரேமையால் பக்தி செய்து ஆனந்தப்படுவோம்; மறந்தும் பிற தெய்வ நிந்தனைகளை செய்ய மாட்டோம்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

# உண்மையான பிரார்த்தனை

–காஞ்சி மஹாஸ்வாமிகள்

உண்மையான பிரார்த்தனை எது? பிரார்த்தனை என்பது நாம் கடவுளிடம் கொடுக்கும் மனு அல்ல. அப்படி செய்தால், கடவுளுக்கு நம் தேவைகள் என்ன என்பது தெரியாது என்றல்லவா ஆகி விடும்? நம் ஒவ்வொருவர் இதயத்தில் உள்ளதும் அவருக்கு தெரியும். ஆயினும், நம் மனதில் உள்ளதை நாம் வெளியில் சொல்லா விட்டால், மிகவும் கஷ்டப்படுகிறோம்.



பிரார்த்தனை மூலம் அந்த கஷ்டத்தை போக்கி கொள்ளலாம். நம் காம, குரோதங்களை தொலைக்கவே நாம் கடவுளை வழிபடுகிறோம்.

எல்லாம் வல்ல பரம்பொருள் ஒருவர் இருக்கிறார் என்ற எண்ணம் ஒன்றே, நம்மை பரிசுத்தமாக்கி விடுகிறது. அவர் அருகில் இருப்பதே, நமக்கு ஓர் ஆத்மிக பலத்தை அளிக்கிறது.

நல்வழியிலிருந்து நாம் அவ்வப்போது தவறி போய், கெட்ட வழிக்கு சென்று, பல பாவங்களையும் தவறுகளையும் செய்கிறோம். ஆனால், நாம் நம் பாவங்களை மறைத்து, நம் குணங்களை மாத்திரம் பிறர் அறிய வேண்டும் என்று விரும்புகிறோம்.

நம் தவறுகளுக்கு, நாம் சில சமயம் உண்மையாக வருத்தப்படுகின்றோம். ஆனால் நடந்ததை நினைத்து வருந்தி கண்ணீர் சிந்தினால் மட்டும் போதாது. ஒவ்வொரு நாளும் படுக்க போகும்போது, நம் தவறுகளுக்கு கடவுளிடம் மன்னிப்பு கேட்டு, இனி அம்மாதிரியான தீய வழிக்கு

போகாமல் இருக்கும் மன வலிமையை கொடுக்கும்படி பிரார்த்திக்க வேண்டும். இத்தனை பாவங்கள் செய்தும், நமக்கு ஒரு வாய் சோறு கிடைக்கின்றதென்றால், அது ஆண்டவனின் எல்லையற்ற கருணையைத்தான் காட்டுகிறது. நமக்கு வரும் சோதனைகளும் நன்மைக்குத்தான் என்று நினைக்க வேண்டும்.

ஓர் உதாரண கதை - ஓர் உப்பு வியாபாரி, உப்பு மூட்டைகளை கோவேறு கழுதை மீது ஏற்றி கொண்டு சந்தைக்கு போனான். வழியில் பெருமழை பெய்து உப்பு எல்லாம் கரைந்து விட்டது. "தெய்வமே உனக்கு கண்ணில்லையா? என் உப்பு எல்லாம் போய் விட்டதே" என்று அவன் கத்தினான். அவன் வீடு திரும்பியபோது, இருட்டி விட்டது. சந்தையில் சரக்கு விற்று விட்டு, பணத்துடன் திரும்புகிறான் என்று நினைத்த திருடர்கள், அவனை மறைந்து இருந்து சுட்டனர். ஆனால் மழையில் துப்பாக்கி மருந்து நனைந்து இருந்ததனால், அது வெடிக்கவில்லை. அந்த வியாபாரி உயிருடன் தப்பித்து கொண்டான்.

வியாபாரியின் உப்பை கரைத்த அதே மழைதான் அவன் உயிரை காப்பாற்றியது. ஆகையால், எது எதற்காக நடக்கிறது என்பது தெரியாத நிலையில், நாம் கடவுளை குறை கூறுவது தவறு.

கணபதி நிறைய நிவேதனம் செய்தால் மகிழ்வார். முருகன் விரதத்தால் மகிழ்வார். சிவன் அபிஷேகத்தால் மகிழ்வார். சூரியன் நமஸ்காரத்தினால் மகிழ்வார். ஆனால் எல்லோரும் தோத்திரத்தினால் மகிழ்வார்கள்.

-மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

**ஸ்டார் விஜய்** தொலைக்காட்சியில், ஜனவரி 4ஆம் தேதி சென்னை காமராஜர் அரங்கத்தில் **GOD INDIA** சார்பாக பாக்யநாதன்ஜி மற்றும் ராமானுஜம்ஜி பரீஷைக்கு செல்லும் மாணவர்களுக்காக ஆற்றிய உரை மற்றும் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையின் Highlights **பிப்ரவரி 8, 9** தேதிகளில் காலை ஒளிபரப்பாக இருக்கிறது.

**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gurua Consulting Private Ltd**

# ஸ்வாமி ராமகிருஷ்ணானந்தர் - 13

சென்னை ராமகிருஷ்ணா மடம் - ராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி விழா ஜூலை 15, 2012 அன்று ஸ்ரீஸ்வாமிஜி ஆற்றிய உரை

குருதேவருக்கான ஒரு மடம் நிறுவ எண்ணி, "அன்னியர்கள் படையெடுப்பினால், அதிகம் பாதிக்கப்படாத இங்கு, பண்டைய கலாசாரம் கொஞ்சம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அதற்கு தகுந்தாற்போல் ஒருவரை இங்கு அனுப்புகிறேன்" என்று சொல்லி விட்டு மதராஸிலிருந்து கிளம்பி போனார் விவேகானந்தர். ராமகிருஷ்ணானந்தரைத்தான் அவர் மனதில், அப்பொழுது நினைத்திருந்தார். கல்கத்தா சென்ற விவேகானந்தர் ராமகிருஷ்ணானந்தரிடம் சொன்னவுடன், அவர், சதானந்தருடன், சென்னைக்கு மறுபேச்சு பேசாமல் கிளம்பினார்.

1897இல் அளசிங்கபெருமாள், நஞ்சுண்டராவ் ஆகியோர் சென்னையில் வரவேற்பு கொடுத்தனர். முதலில் ஐஸ் ஹவுஸில்தான் தங்கினர் . அங்கேயே தினமும், ராமகிருஷ்ணரின் திருவுருவத்திற்கு பூஜைகள் செய்து வந்தார் சசி. பிலகிரி அய்யங்கார் பல சேவைகளை அப்பொழுதே செய்தவர். பொருளாதார ரீதியாக பின்தங்கிய பல குழந்தைகளுக்கு, கல்வி கற்று கொடுத்தார். தன் காலத்திற்கு பிறகு கூட, ராமகிருஷ்ணாமடத்திற்கு மாதாமாதம் பணம் கொடுக்க வேண்டும் என்று உயில் எழுதி வைத்தார் பிலிகிரி அய்யங்கார். அவர் செய்த பல சமூக சேவைகளுக்காக கடன் வாங்கி இருந்தார். அது கட்ட முடியாமல் போகவே, கட்டிடம் ஏலத்திற்கு போனது. ஏலத்தில் 17,500ரூபாய் வந்தது. அந்த கட்டிடத்தில்தான் ராமகிருஷ்ணானந்தர் அப்பொழுது இருந்தார். ஏலம் நடக்கையிலேயே, "நான் கட்டிடம் கட்ட எல்லாம் வரவில்லை. குருதேவர் சேவைக்காக வந்திருக்கிறேன்" என்பார் அவர்.


சில நாட்கள், சில இடங்களில் இருந்த பின், இன்று மயிலாப்பூர் மடம் இருக்குமிடத்திற்கு வந்தார். இது ஒரு அன்பர் தானமாக தந்த இடம். வந்த அன்று நல்ல மழை. ராமகிருஷ்ணருக்கு குடை பிடித்து கொண்டே வந்தார் சசி. இங்கு வருபவர்களுக்கெல்லாம் நான் நிரந்தரமாக அருள்மழை

பொழிய போகிறேன் என்று, ராமகிருஷ்ணர் சொல்லாமல் சொல்வது போல வந்த அன்றே, மழை பெய்தது. இங்கிருந்து கொண்டு புரசைவாக்கம், ஜார்ஜ்டவுனுக்கெல்லாம் சென்று லெக்சர் கொடுத்து வருவார் சசி மஹாராஜ். அதில் ராமகிருஷ்ணர் போலவே சசி மஹாராஜுக்கும் இருந்த சத்ய நிஷ்டையை பார்க்க முடிகிறது. ராமகிருஷ்ணர் இன்று யதுமல்லிக்கின் வீட்டிற்கு போகிறேன் என்று சொன்னார் என்றால், அன்று அங்கு போய் காலையாவது வைத்து விட்டு வருவார். இல்லாவிடில் ராமகிருஷ்ணருக்கு தூக்கமே வராது.

ராமகிருஷ்ணானந்தரும் மற்றொருவரும் ஒரு இடத்திற்கு லெக்சர் கொடுக்க போகின்றனர். அவர் பேச்சை கேட்க ஒருவரும் வரவில்லை. உடன் வந்தவர், திரும்பி விடலாம் என்று சொல்வார் என்று நினைத்தார். ஆனால் ராமகிருஷ்ணானந்தரோ பாய், டெஸ்க் எல்லாவற்றையும் விரிக்க சொல்லி விட்டு, ஆயிரம் பேர் முன்னாலிருந்து கேட்பது போல், ஒருமணி நேரம் உபன்யாசம் செய்தார். கூட வந்தவர், "எப்படி உங்களால், ஒருவரும் இல்லாத பொழுதும் பேச முடிந்தது" என்றபொழுது, "என்னை ஒருவர் பேச கூப்பிட்டு விட்டார். அவர் வராவிட்டால் போகட்டும். நான் கொடுத்த வாக்கை மீற முடியாது. என் வாக்கு பொய்யாக கூடாது" என்றார் சசி. இந்த சத்ய நிஷ்டையானது, அவருக்கு ராமகிருஷ்ணரிடம் இருந்துதான் வந்து இருக்கிறது.

அப்படி எல்லாம் உழைத்து இந்த மதராஸ் மடத்தை ஸ்தாபித்தார் சசி மஹாராஜ். இன்று இங்கு வந்து தியானம் செய்யாதவர்களே இருக்க முடியாது என்று சொல்லக்கூடிய அளவில் ராமகிருஷ்ணரின் சான்னித்யம், இந்த இடத்தில் பரவி இருக்கிறது.

ஆதிசங்கரர், "மஹான்களை அடிக்கடி சிந்திப்பதால் பெரிய புண்யம் கிடைக்கிறதெனினும், அவர்களை ஸ்மரிப்பதாலேயே ஏதோ ஒரு ஜன்மத்தில் அவர்களுடைய உயர்ந்த ஸ்திதியை நாம் அடைவோம்" என்கிறார். இன்று "குருபக்தி என்றால் என்ன?" என்று காட்ட வந்த, ராமகிருஷ்ணரின் முக்கிய அம்சமான ராமகிருஷ்ணானந்தரின் 150வது ஜெயந்தி புனித தினம். அவருக்கு நம் எல்லோரின் க்ருதக்ஞையை தெரிவிக்க, இது ஒரு நல்ல சந்தர்ப்பம். அவ்விதத்தில், இந்த ராமகிருஷ்ணானந்தரின் புனித சரித்திரத்தை இங்கு கூடி கேட்ட பலரும், இதற்கு ஏற்பாடு செய்தோரும் மிகவும் பாக்யசாலிகள் ஆவர்.




# Dr. Shriraam Mahadevan

**MD (Int Med), DM (Endocrinology)**
**Consultant in Endocrinology and Diabetes**
**Regn. No 62256**

## ENDOCRINE & SPECIALITY CLINIC

**New 27/1, Old 11/1, (Gr.Floor), 4th Cross Street,**
**R.K.Nagar, Mandaveli, Chennai - 600 028.**
**(Next to Krishnamachari Yogamandiram)**
**Tel: 2495 0090Mob: 94458 80090**
**E-mail: mshriraam@gmail.com,www.chennaiendocrine.com**
**www.chennaiendocrine.com**

## சனாதனப்புதிர் பகுதி 59 - <u>கேள்விகள்</u> - ஆத்ரேயன்

**1.** லலிதா தேவியை பற்றி எந்த புராணம் விரிவாக கூறுகிறது?

**2.** லலிதா சஹஸ்ர நாமத்திற்கு பல உரைகள் காணப்படுகின்றன. முக்கியமான உரைகள் எவை?

**3.** பாஸ்கரராயரின் தீக்ஷா நாமம் என்ன?

**4.** ஹயக்ரீவரை பற்றிய உரைகள் எங்கே காணப்படுகின்றன?

**5.** லோபாமுத்ரா எந்த நாட்டு அரசி? எங்கே யாரை மணந்து கொண்டார்?

**6.** தசார்ண தேசத்து அரசனான ஹிரண்யவர்மாவிற்கும் சிகண்டிக்கும் என்ன சம்பந்தம்?

**7 .**துரோணாசாரியார் மஹாபாரத போரில் கருடவ்யூகம் அமைத்தபொழுது கருடனின் கழுத்து பகுதியில் யாரை நிறுத்தினார்?

**8.**விதர்ப்ப தேசத்து தலைநகர் எது?

**9.** ச்யவனர் - சுகன்யா இவர்களின் குழந்தை பெயர் என்ன?

**10.**ப்ராக்ஜ்யோதிஷபுரத்து அரசர்கள் யார்?

**விடைகள்**

**1.**ப்ரஹ்மாண்ட புராணம் .

**2.**சௌபாக்ய பாஸ்கரம் - பாஸ்கர ராயர்; வித்யாரண்ய பாஷ்யம் - வித்யாரண்ய முனி; விமர்ஸாநந்த நாதர் - 2000ஸ்லோகங்கள் கொண்டது; சௌபாக்ய ரத்னாகரம் - ஸ்ரீநிவாச சுந்தரர்; பட்டநாராயணர் எழுதிய உரை 2500 ஸ்லோகங்களை கொண்டது.

**3.**பாஸுராநந்த நாதர்

**4.**பஞ்சவிம்ச ப்ராஹ்மணம்; தைத்திரீய ஆரண்யகம்; ஸ்கந்த புராணம்; தேவி பாகவதம்; ப்ரஹ்மாண்ட புராணம் முதலியன.

**5.**விதர்ப்பதேசத்து அரசி; மஹா ஸிந்து தீர்த்தம் என்ற இடத்தில் அகஸ்தியரை மணந்தாள்.

**6 .**சிகண்டியின் மாமனார். ஹிரண்யவர்மாவின் பெண்ணை சிகண்டி மணந்தார்.

**7.**பூதசர்மா என்ற அரசரை .

**8.**குண்டிந நகரம்.

**9.**ப்ரமதி அல்லது ப்ரமீதி.

**10.**பௌமாஸுரன் என்ற நரகாசுரன்; பகதத்தன்; வஜ்ரதத்தன்.

# பாலகர்களுக்கு ஒரு கதை



## கிளி மந்திரம்!

காடு ஒன்றில் ஒரு துறவி தனிமையில் வாழ்ந்து, தவம் செய்து வந்தார். அந்த காட்டிற்கு அடிக்கடி வேடர்கள் வந்து, அருமையான அழகான பச்சைக்கிளிகளை பிடித்து செல்வதை கண்டு மனம் வருந்தினார் அவர். ஒருநாள் வழக்கம் போல் ஒரு வேடன் வந்து வலை விரித்தான். அதில் சில கிளிகள் சிக்கி கொண்டன. அந்த துறவி அந்த வேடனிடம் பேசி, எப்படியோ நான்கு கிளிகளை தான் பெற்று கொண்டார். அந்த கிளிகளுக்கு தினமும் பாடம் எடுப்பார். "நான் சொல்வதை அப்படியே திரும்ப சொல்ல வேண்டும்" என்று கூறி, அந்த கிளிகளுக்கு கீழ்க்கண்ட பாடத்தை ஒரு பாட்டு போல சொல்லி கொடுத்தார்.

"வேடன் வருவான், வலை விரிப்பான், அவன் தந்திரம் தெரியும், அந்த வலையில் நாங்கள் சிக்கி கொள்ள மாட்டோம்" - அந்த நான்கு கிளிகளும் அந்த பாடல்களை நன்றாக கற்று கொண்டு விட்டன. எப்பொழுதும் இந்த பாடலையே, அவை பாடி கொண்டிருந்தன.

துறவியும், "நீங்கள் இப்பொழுது காட்டிற்கு பறந்து சென்று சுதந்திரமாய் இருங்கள். நீங்கள் சுதந்திரமாய் இருப்பதோடு மட்டும் அல்லாமல், காட்டில் உள்ள எல்லா கிளிகளுக்கும் கற்று கொடுங்கள். அப்படி எல்லோரும் கற்று கொண்டு விட்டால், நீங்கள் யாருமே வேடனிடம் அகப்பட்டு துன்பப்படவே வேண்டாம்" என்றார்.

கிளிகளும் பறந்து சென்றன. எல்லா கிளிகளுக்கும் இந்த பாடலை கற்று கொடுத்தன. காட்டில் எல்லா கிளிகளுமே எப்பொழுதுமே இந்த பாடலை பாடி கொண்டிருந்தன.

வேடன் ஒருநாள் வழக்கம் போல், காட்டிற்கு வலையை எடுத்து வந்தான். கிளிகள் இந்த பாட்டை பாடி கொண்டிருப்பதை பார்த்து, மிகவும் வருந்தினான். இனி தனக்கு பிழைப்பு நடக்காது; ஏன் என்றால், இந்த கிளிகள் நம்

தந்திரத்தை தெரிந்து கொண்டு விட்டன என்று புலம்பியவாறே வீட்டிற்கு வந்தான்.

சில மாதங்கள் ஆயிற்று. வேடனுடைய வீட்டிற்கு வெளி ஊரிலிருந்து, அவனுடைய உறவினன் வந்தான். நம்முடைய வேடன் வறுமையில் தவிப்பதை பார்த்து, அதற்கான காரணத்தை கேட்டான். வேடனும் நடந்த விஷயங்களை சொன்னான்.

வெளியூரில் இருந்து வந்திருந்த சொந்தக்கார வேடன் நம் வேடனை அழைத்து கொண்டு, காட்டுக்கு சென்றான். நம் வேடனை பார்த்து, "வலையை வழக்கம் போல் விரி" என்றான். விரித்ததுதான் தாமதம். சடசட என்று நிறைய கிளிகள், அதுவும் இந்த பாடலை பாடி கொண்டே வந்து சிக்கி கொண்டன. நம்முடைய வேடன் உறவின வேடனை பார்த்து, "எப்படி இது?" என்றான்.

அந்த உறவின வேடனோ, "அந்த கிளிகள், 'சொன்னதை சொல்லுமாம் கிளிப்பிள்ளைகள்' போல், அந்த துறவி சொன்னதை அப்படியே சொல்லி கொண்டிருந்தன. உண்மையில் அவைகளுக்கு அதன் பொருள் தெரியாது என்பதை நீ தெரிந்து கொள்ளவில்லை! அவ்வளவுதான்!" என்றான்.

அதுபோல்தானே நாமும்!

**குருமார்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு லட்சியம் கடமை இருக்கின்றது. அவர்களது வழிகளையும் செயல்பாடுகளையும் மற்ற குருமார்களுடன் ஒப்பிட்டு பார்ப்பது, தேவையற்ற ஒரு இழிவான செயலாகும். அவரவர்க்கு விதிக்கப்பட்ட குருவை கெட்டியாக பிடித்து கொண்டு பின்பற்றும் போது, மற்ற குருமார்களை பற்றி மனதாலும் குறைவாக எடை போட கூடாது.**

**- ஞானானந்தகிரி ஸ்வாமிகள்**

**டிசம்பர் 25.12.2013** அன்று கோபகுடீரம் ஆண்டு விழா சென்னை மஹோதயா ஹாலில் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் நடைபெற்றது. நிரம்பி வழிந்த அரங்கத்தில், ஏராளமான கோபகுடீர குழந்தைகள் பல கலைநிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் தம் திருக்கரங்களால் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கினார்கள். விழாவில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பேசுகையில் மார்கழியில் வைகுண்ட ஏகாதசி ஆருத்ரா தரிசனம் போன்று கோபகுடீரம் ஆண்டு விழாவும் மறக்க முடியாததாக அமைந்து விட்டது என்றார்கள்.

**ஜனவரி 1.1.2014** ஆங்கில புத்தாண்டு அனுமத் ஜெயந்தி அன்று பெரியகுளம் தேனி ரோட்டில் ஸ்ரீரேணுகாதேவி வித்யாலயத்தில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் முன்னிலையில் மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது. பள்ளி சார்பாக மிக அழகாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. பல ஊர்களில் இருந்தும் பல நாடுகளில் இருந்தும் 5500க்கும் மேற்பட்ட அன்பர்கள் இதில் கலந்து கொண்டு பயன் பெற்றனர். ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள், நாம மஹிமை குறித்து அருளுரை வழங்கினார்கள். அன்று அனுமத் ஜயந்தியானபடியால், சென்னை மதுரபுரி ஆஸ்ரமத்தில் எண்ணாயிரத்திற்கும் மேற்பட்ட அன்பர்கள், கன்யாகுமரி ஆஞ்சநேயரின் தரிசனத்திற்கு வந்திருந்தனர்.

**ஜனவரி 11.1.2014** அன்று வைகுண்ட ஏகாதசி மிக சிறப்பாக மதுரபுரி ஆஸ்ரமத்தில், மாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிகவரதனுக்கு திருமஞ்சனத்துடன், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் முன்னிலையில் கொண்டாடப்பட்டது. இரவு முழுவதும் ஏராளமான அன்பர்கள் கூடி, ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்து மகிழ்ந்தனர். அனைத்து நாமத்வார்களிலும் அகண்டமாக நாமகீர்த்தனம் நடைபெற்றது. தனுர் மாதம் முழுக்க, அனைத்து "காட்" சத்சங்கங்களிலும், நாமத்வார்களிலும் சிறப்பாக அதிகாலையில் நகரசங்கீர்த்தனம் நடைபெற்றது. இதன் காணொளி நாமத்வார் இணையதளத்திலும் வெளியிடப்பட்டு இருந்தது.

**ஜனவரி 11 - 19.1.2014** - சென்னை நாரத கானசபாவில் ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் பக்த விஜயம் உபன்யாசம் நடைபெற்றது. தினம் தோறும் அரங்கம் நிரம்பி வழிந்தது. போதேந்திர ஸ்வாமிகள், ஸ்ரீதர அய்யாவாள், மருதாநல்லூர் சத்குரு ஸ்வாமிகள், பக்த மீரா, தியாகராஜ ஸ்வாமிகள், ஏகநாதர், பத்ராசல ராமதாசர், புரந்தரதாசர், ஆண்டாள் கல்யாணம் ஆகிய பக்த சரித்திரங்களை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் அருளியதை அன்பர்கள் மெய்மறந்து கேட்டு அனுபவித்து ஆனந்தித்தனர்.

**டிசம்பர் 21-27** தேதிகளில், அமெரிக்கா ஹூஸ்டன் நாமத்வாரில் ஆண்டு விழா மிக சிறப்பாக, கோலாஹலமாக கொண்டாடப்பட்டது. திரளான அன்பர்கள் முன் ராமானுஜம்ஜி பாகவத உபன்யாசம் செய்தார்.

**டிசம்பர் 13-15** தேதிகளில் இந்தோனேசியாவில், பூர்ணிமாஜி முன்னிலையில் பல சத்சங்கங்கள் நடைபெற்றன. ஒவ்வொரு இடத்திலும் பூர்ணிமாஜியின் உபன்யாசங்களுக்கு பிறகு, நாம மஹிமை குறித்து, மலேசிய நாமத்வாரை சேர்ந்த சுனிதாஜி மலேய மொழியிலும், ராமகிருஷ்ணஹரிஜி பிரதேச மொழியிலும் பேசினர்.

**ஜனவரி** மாதம் 4ஆம் தேதி சென்னை காமராஜர் அரங்கத்தில் 4000 மாணவர்கள் முன்பாக, டாக்டர் பாக்யநாதன்ஜி மற்றும் ராமானுஜம்ஜி மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நிகழ்த்தினர். ஜனவரி மாதத்தில் சிவகாசி, தாயில்பட்டி, விருதுநகர், அருப்புக்கோட்டை, ராஜபாளையம், திருநெல்வேலி. அம்பாசமுத்திரம் ஆகிய இடங்களில் *23* பள்ளிகளில், சுமார் *6500* மாணவர்கள் முன்பாக, முரளிஜி மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நிகழ்த்தினார். ஜனவரி 10ஆம் தேதி, அம்பாசமுத்திரம் செங்குந்தர் மண்டபத்தில் 200அன்பர்கள் முன்பாக, ஒரு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனையையும், அவர் நிகழ்த்தினார். சென்னையில் ஜனவரி 9, 18 தேதிகளில், அடையாறு மற்றும் தாம்பரத்தில், மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனைகள் நடைபெற்றன. இதில் திரு.டாக்டர்.ஜனனி வாசுதேவன், திரு.விக்னேஷ் மற்றும் திரு.சனத் மாணவர்களை ஊக்குவித்து பேசினர்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீபக்த கோகில்ஜி -2

சீதாதேவியின் தரிசன காட்சியை கண்ட கோகில்ஜி தான் மூர்ச்சையாகி விட்டார். குருதேவரின் ப்ரயாஸையால் அவருக்கு வெளி நினைவு திரும்பியது. அவருக்கு தைரியமளித்து அவர், "இனி நீ இந்த பாவத்திலேயே பக்தி செய்" என்று உபதேசித்தார்.

கோகில்ஜி கோட்காங்கடாவில் சில நாட்கள் குருதேவருடன் இருந்த பின், அவருடனே லாகூர் சென்றுவிட்டார். இவ்வாறு எட்டு மாதங்கள் கோகில்ஜியிற்கு தனது ஸத்ஸங்கத்தின் லாபத்தையளித்த பின், ஸ்வாமி அவிநாஷ்சந்த்ரஜி வங்காளம் சென்றுவிட்டார். கோகில்ஜியும் மேஹட் எனும் க்ராமத்திற்கு சென்றுவிட்டார்.

அங்கு ஓர் இரவு அவரது கனவில் ஸ்ரீஆத்மாராம்ஜி தோன்றி, "மீர்புர் தர்பாரின் மஹந்தான ஸ்வாமி ஞானதாஸ்ஜி மறைந்துவிட்டார். நீ அங்கு சென்று தர்பாரின் ஸேவையை ஏற்றுக்கொள்" என்று கூறினார். மீர்புரின் ஜனங்களும் அவரிடம் தர்பாரின் ஸேவையை ஏற்குமாறு ப்ரார்த்தித்தனர். "என்னுடைய பஜனை, ஏகாந்தவாஸம், த்யானம், வைராக்யம் இவற்றிற்கு எந்த விதமான இடையூறும் வராமலிருக்க ஏற்பாடு செய்தீர்களானால், நான் தர்பாரில் ஸேவை செய்ய ஒப்பு கொள்கிறேன்" என்று தனது முடிவை கூறினார் கோகில்ஜி. இதற்கு எல்லோரும் பெருமகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டனர். மீர்புரில் கோகில்ஜியும் மஹந்த் பதவியை ஏற்றார்.

மஹந்தாக பதவி ஏற்ற பின்னரும், இரவும் பகலுமாக பஜனை, ஸ்மரணம், கீர்த்தனை என்று தன்மயமாகி தர்பாரின் மேல் மாடியிலேயே ஏகாந்த வாஸம் செய்தார். ஒரு பொழுதும் கீழே இறங்கவே மாட்டார். அப்படியிருந்த போதிலும் தர்பார் ஸேவை செம்மையாகவே நடந்து வந்தது. இதற்கிடையில், ஒரு நாள் அவரது கனவில் அவரது குருநாதர் ஸ்வாமி ஸ்ரீஅவிநாஷ்சந்த்ரஜி தோன்றி அவரிடம், "நீ தினமும் எங்கு

ஸ்நானம் செய்கிறாயோ, அங்கு ஒரு மரத்தின் அடியில் தோண்டினால் நீ விரும்புவது உனக்கு கிடைக்கும்" என்று ஆக்ஞையிட்டார்.

கோகில்ஜியும் மிகவும் குதூஹலத்துடன் அந்த குறிப்பிட்ட இடத்தை தோண்டினார். அங்கு அவருக்கு ஒரு தங்க பெட்டகம் கிடைத்தது. அதனுள் விலக்ஷணமான ஒரு போஜ பத்திரத்தில், ஜனகநந்தினி ஸ்ரீஸீதாதேவியின் ஒரு அழகான வடிவம் பதித்திருப்பதை கண்டார். இதை கண்ட மாத்திரத்தில் அவரது ரோமங்கள் சிலிர்த்தன. இதை ஒரு சிறிய குடிசையில் சிறிய ஊஞ்சலில் வைத்து மிகவும் கொண்டாடினார்.

ஸ்ரீஸ்வாமினிஜியை இவ்வாறு அடைந்த கோகில்ஜியின் பாவங்கள் பெருகலாயின. ஒரு ஸமயம் 'ஹா ஸ்வாமினி! ஹா ஸ்ரீஜானகி!' என்று கூறியபடியே மூர்ச்சையடைவார். மற்றொரு ஸமயம் ஸீதா தர்சனம் பெற்றவராக ஆடி-பாடி, சிரித்துக் கொண்டே ஓடுவார்.

இந்த ஸமயத்தில் தன் விரஹத்தைப் போக்கி கொள்ள கோகில்ஜி விதேஹ தேசத்திற்கு யாத்திரை மேற்கொண்டார். ஜனகபுரியிலும் ஸீதாமடீ எனும் க்ஷேத்திரத்திலும், அவர் ஒரு மாத காலம் தங்கினார். ஸீதாமடீயில் கோயிலில் தரிசனம் செய்து கொண்டிருக்கும்பொழுது அவருக்கு ஒரு திவ்ய அனுபவம் ஏற்பட்டது. அதில் ஸீதையின் தாயான ஸுநயனாஜி தனது இளம் குழந்தையை இடுப்பில் வைத்துக் கொண்டு, ஜனக மஹாராஜனுடன் யக்ஞ பூமியிலிருந்து திரும்பி கொண்டிருப்பதை அவர் கண்டார். பச்சிளம் குழந்தையை யாருடைய கண்ணும் பட்டுவிடக்கூடாது என்று அவளை நன்கு மூடியபடி எடுத்து வந்து கொண்டிருந்தார் ஸுநயனாதேவி. கோகில்ஜியும் ஸஹசரீ ரூபத்தில் அங்கு ஒரு மூலையில் நின்று கொண்டிருந்தார். ஸுநயனா தேவியிடம், குழந்தையை தனக்கு ஒரு கணம் காண்பிக்கும்படி ப்ரார்த்தனை செய்தார். ஆனால் அவளோ கேட்டும் கேட்காதது போல் சென்றுவிட்டாள். அப்பொழுது கோகிலஸஹசரி, கூப்பிய கைகளில் புஷ்பத்தை வைத்துக்கொண்டு, கோகில கண்டத்தில் ப்ரார்த்தனை கீதம் பாட ஆரம்பித்தாள். ஸங்கீதமயமான இந்த ப்ரார்த்தனையில் அவருக்கு ஏற்பட்ட மேனிசிலிர்ப்பு, குரல் தழுதழுப்பு, முகம் வெளுறுதல் போன்ற லக்ஷணங்கள் கண்டு அங்குள்ள அனைவரும் வியந்தனர்.

(தொடரும்)

# *மாலே மணிவண்ணா - 124*




–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

இசையில் பெருவிருப்பம் உடையவன் பகவான். அவனது இடது கையில் எப்பொழுதும் சங்கம் உள்ளது. வலது கையில் குழல் உள்ளது. இசைக் கருவிகளைத் தன்னோடு உடனாய் எப்பொழுதும் வைத்திருக்கும் பகவானுக்கு இசையில் மிக்க ஈடுபாடு உள்ளது என்பது சொல்லவும் வேண்டுமோ?

*சங்கத் தொனியும் தடங்குழல் ஓசை எனும்*

*துங்கத் தொனியும் தொனிப்பிப்போன்*

என்று பலபட்டடைச் சொக்கநாதப்பிள்ளை, அழகர் கிள்ளை விடு தூதில் கூறுவார்.

திருமாலிருஞ்சோலை மலையே பகவானாக இருப்பது. அது 'காண மயர் அறுக்கும் காமக் கடவுள்' கண்டு வழிபட நமது துன்பங்களைப் போக்குகின்ற வழிபடுதெய்வம் என்று முன்பும் கூறினார் அல்லவா! ஆகவே இசை விருப்பனாகிய பகவானைப் போலவே இம்மலையிலும் இடைவிடாது இசைமுழக்கம் இருக்கிறது என்பதைக் காட்டி, இம்மலையே திருமால்தான் என்பதற்கு மேலும் ஒரு சான்று கூறினார் ஆயிற்று.

இனி, மலையை வழிபடுங்கள் என்று சொல்ல வருகிறார்.

*"தைய லவரொடும் தந்தார் அவரொடும்*

*கைம் மகவொடும் காதலவரொடும்*

*தெய்வம் பேணித் திசை தொழுதனிர் சென்மின்*

என்று வழிபட வருவாரை அழைக்கும் அழகைப் பாருங்கள். திருக்கோயில் வழிபாடு எவ்வாறு செய்யல்

வேண்டும் என்பதைச் சொல்லித் தருவது போல் உள்ளது.

மனைவியோடு செல்ல வேண்டும்; கைக்குழந்தையுடன் செல்ல வேண்டும்; உம்மைப்பெற்ற தாய், தந்தையர்களை உடன் அழைத்துச் செல்ல வேண்டும், அன்புமிக்க உறவினர்களை அழைத்துச் செல்ல மறந்துவிடாதீர்கள் என்கிறார். இம்மலையையே தெய்வமாகக் கருதித் திசைநோக்கித் தொழுது செல்லுங்கள் என்கின்றார்.

திருமலையைக் காண்பதற்குமுன் திசைநோக்கித் தொழுதலும், மலையைக் கண்ட அளவிலே, திருமாலை நேரே கண்டாற்போல வழிபட்டும் செல்ல வேண்டும்.

"கன்றை விட்டுக் கல்யாணம் போவார்களா" என்று ஒரு பழமொழி உண்டு. திருமணங்களுக்குச் செல்கிறவர்கள் குழந்தைகளை அழைத்துக் கொண்டே செல்ல வேண்டும் என்று அந்தப் பழமொழி கூறுகிறது.

திருக்கோயிலுக்கு வழிபடச் செல்லும்போதும் குடும்பமாகச் செல்ல வேண்டும் என்கிறது பரிபாடல்.

'தையலவரொடும்' என்பது தம் மனைவியரோடு செல்க என்பதாம். 'தந்தார் அவரொடும்' என்பது தம்மை உலகில் தந்தவர்களாகிய தாய்தந்தை ஆகியோர் என்பதாம். 'கைம்மகவொடும்' என்பது கைக்குழந்தையொடும் என்பதாம். ஒரு வயதுக்குட்பட்ட கைக்குழந்தையையும் அழைத்துச் செல்ல வேண்டும் என்பதாகும்.

'காதலவரொடும்' என்பது தம்மால் அன்பு செய்யப் பெற்ற உறவினர்களோடும் என்பதாகும். இப்படி குடும்பமாக, கூட்டமாகச் சென்று வழிபட்டால் இல்லத்தில் தெய்வமணம் கமழும் என்பதைச் சொல்ல வேண்டுமோ?

குழாங்களாய் அடியீருடன் கூடிநின்று, ஆடுமினே என்று நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் கூட்டமாய்ப் பாகவதர்களோடு சேர்ந்து நின்று, பாடி ஆடுங்கள் என்பதை இங்குக் கருதுக. இனி, அப்பெருமானை ஏத்துகிறார்.

(தொடரும்)

# அப்பாலுக்கு அப்பால்



அக்கா மஹாதேவி -2

கௌசிகன் எனும் ஒரு சமண மன்னன் அந்த பிரதேசத்திற்கு மன்னனாய் அக்காலத்தில் இருந்தான். அவன் நகர் வலம் வந்திருந்த பொழுது, ஊர்மக்களோடு அதை பார்க்க மஹாதேவியாரும் வந்திருந்தார். யானை மேல் அமர்ந்து வந்து கொண்டிருந்த மன்னன் மஹாதேவியை பார்த்தவுடன் ஸ்தம்பித்து விட்டான். அப்படி ஒரு பேரழகு. உடனே மன்னனுக்கு அவரை திருமணம் செய்ய ஆசை உண்டானது. மந்திரி பிராதானிகளிடம் சம்மதம் கேட்க சொன்னான். அவர்களே அவனிடம் "மன்னா! நீங்கள் ஒரு சாதாரண பெண்ணை மணப்பதா?" என்று சொல்லி பார்த்தார்கள். அவன் கேட்பதாக இல்லை.

"பக்தி மிக்க நம் குலக்கொழுந்தை ஒரு சமண மத மன்னனுக்கு கொடுப்பதா?" என அக்காவின் பெற்றோர்கள், கலங்கினர். முடியாது என்றால், மன்னன் மிரட்டுவானே, துன்பங்களை தருவானே, ராஜ விரோதம் வேண்டாமே என்பதால் சம்மதித்தனர். மஹாதேவிக்கு பதிமூன்று பதினான்கு வயதுதான் இருக்கும். அவர் சம்மதிக்கவே இல்லை.

மன்னன் மஹாதேவியிடம், "நீ ஏன் மறுக்கிறாய்? சம்மதிக்கவில்லை எனில் உன் பெற்றோரை நீ உயிருடன் பார்க்க முடியாது" என்றான். அக்கா இது தன் ஊழ்வினை என்று நினைக்கவில்லை. தெய்வத்தின் விளையாட்டு என எண்ணவில்லை. மன்னனின் மயக்கம் என்றே நினைத்தார். தமக்கு ஊண் தந்த தம் பெற்றோருக்கு கஷ்டம் வரக்கூடாது என்ற ஒரே காரணத்திற்காக சம்மதித்தார். இருப்பினும் அக்காவின் மனம் வேதனையில் வாடியது. அழுது அழுது மயக்கமுற்றார். பெற்றோர் அவரிடம், "மஹாதேவி, தெய்வம் என்பது மறு உலகிற்கே; இவ்வுலகில் சாதாரணமாக இல்வாழ்க்கை வாழலாம்" என்றார்கள். "ஏன் பசவரையே பார். அவர் திருமணம் செய்யவில்லையா" என்றும் பலவிதம் சமாதானம் செய்தது அவருக்கு காதில் விழவே இல்லை.

பெற்றோருடன் சிறு வீட்டில் இருந்த மஹாதேவியாரின்

பக்தியை உலகறிய செய்யவே, மல்லிகார்ஜூனர் திருமண ஆசையை மன்னனுக்கு கொடுத்தார் போலும்.

திருமணத்திற்கு முன், "நான் உனக்கு பெயரளவிலேதான் மனைவி. அடியார்களுடன் நான் இருப்பதையோ என்னை அவர்கள் சந்திக்க வருவதையோ தடை செய்ய கூடாது. பூஜையில் ஈடுபட்டிருக்கும் வேளையில் குறுக்கிட கூடாது. என் பக்திக்கு நீ யாதொரு இடையூறும் செய்ய கூடாது. இல்வாழ்க்கைக்கு நிர்ப்பந்தமும் செய்ய கூடாது" என்று மன்னனுடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார் மஹாதேவி. மன்னனுக்கு இருந்த மயக்கத்தில் திருமணம் நடந்தால் போதும் என்று இருந்தது. திருமணத்திற்கு பின், அக்காமஹாதேவி மனதில் மாற்றம் இருக்கும் என்று அவன் மனம் எண்ணியது.

திருமணத்தில் கௌசிகன் குஷியாக இருந்தான். மஹாதேவியாரோ வேறு நினைவுகளில் மூழ்கி இருந்தார். ஸ்ரீசைலத்தில் மல்லிகார்ஜூனருடன் தனக்கு திருமணம் நடைபெறுவதாக, அக்காவிற்கு நினைவுகள் சுழன்று கொண்டு இருந்தது. அரண்மனைக்கு வந்த பின், ஒரு ராணி போல் தன்னுடன் வலம் வர வேண்டும் என மன்னன் எதிர்பார்த்தான். அதெல்லாம் கொஞ்சமும் அக்காவிடம் அவனால் எதிர்பார்க்க முடியாமல் போனது.

எப்பொழுது மன்னன், அவர் அருகில் சென்றாலும் மல்லிகார்ஜூனரை பற்றியே பேச்சு. கணவனான தன்னிடமேயே மனைவி, தனக்கு ஒரு கணவன் இருப்பதாக பேசுவதை எவனால்தான் பொறுத்து கொள்ள முடியும்? கௌசிகனும் பொறுமை இழந்தான்.

சிலநாட்களிலேயே, ராஜசபைக்கு வலுக்கட்டாயமாக அவரை இழுத்து வந்து விசாரிக்க சொன்னான். சபை முன்னர் அக்கா அழுத்தந்திருத்தமாக "எனக்கு கணவர் ஸ்ரீசைலத்து மல்லிகார்ஜூனரே; வேறு யாரும் என் கணவராகார்" என்றார். எல்லோருக்கும் அவரை பார்த்தால், அழகு பதுமைக்கு பைத்தியம் பிடித்து உள்ளது என்று தோன்றியது. மனைவி மேல் பித்து இருந்தும், அவள் சிறிதும் தன் பேச்சை கேட்காமல் இருந்ததால் மன்னனுக்கு நாளடைவில் மஹாதேவி மேல் வெறுப்பும் கோபமும் வந்தது. ஏனெனில் மஹாதேவியார் பக்திமயமாகவே எப்பொழுதும் இருந்தார்.

(தொடரும்)

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 120
For Details: **+91-44-24895875**

"மதுரமுரளி" மாத இதழ் சந்தா அனுப்ப முகவரி:

Guruji Sri Muralidhara Swamigal Mission, 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83 .
**D.D.** in name of **Guruji Sri Muralidhara Swamigal Mission** / நேரில் ரொக்கம் / மணியார்டர் (**D.D /M.O/Cash**) மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.

***ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.***

* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission
* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.

**ஸ்ரீஸ்வாமிஜியின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | பிப்ரவரி 10,25, மார்ச் 12 |
| பிப் 4 | வசந்த பஞ்சமி - ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் பிரதிஷ்டா தினம் |
| பிப் 6 | தாம்பரம் கன்னடபாளையம் ஸ்ரீனிவாச பெருமாள் கோவில், சம்ப்ரோக்ஷணம் |
| பிப் 9 | வைஷ்ணவி ஆஸ்ரமம், திருமுல்லைவாயில் |
| பிப் 12 | குடியாத்தம் கோதண்டராமர் கோவில் சம்ப்ரோக்ஷணம் |
| பிப் 27 | மஹா சிவராத்திரி - கன்யாகுமரி ஜயஹனுமான் பிரதிஷ்டா தினம் |
| பிப் 28 | "தத்வலோகா" எல்டாம்ஸ் சாலை |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை
Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org என்னும் முகவரிக்கு அனுப்பவும்.